தலைப்பு 322 – தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம் - 2024

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 322 – தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2025 மே 30 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் விவசாயத் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 மே 21 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் ஆகியவற்றுக்குரிய குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக் கூற்றுக்கள் அரசின் நிதிப் பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தினதும் பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக் கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக் கூடும். எனது அறிக்கை

தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தினதும் பாராளுமன்றத்தின் பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டிற்காக மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப் பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும். தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் தேசிய தாவரவியல் பூங்காக்கள்திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக

காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-

1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

(அ) வருமானம் அல்லாத பெறுவனவு

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
திணைக்களத்தின் பெறுவனவு அடிப்படையில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய பெறுமதி சேர்வரி (VAT) பெறுமதி ரூபா 23,831,212 என நிதி நிலைமை கூற்றில் காண்பிக்கப் பட்டிருந்த போதும் கணக்காய்வின் போது மேற்கொள்ளப்பட்ட கணக்கீடுகளின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய பெறுமதி ரூபா 22,838,875 ஆக இருந்ததால் ரூபா 782,559 ஆன இணக்கமின்மை என்று அவதானிக்கப்பட்டது.	அறிமுகப்படுத்தப்பட்ட கணக்கீட்டு மென்பொருளான CIGAS, ITMIS மற்றும் VAT Return கையளிப்பு நடைமுறை அடிப்படையில் உருவாகிய விடயம் ஒன்றாக.	முறையான பரிசோதனை ஒன்று மேற்கொண்டு திணைக்களத்தின் ஆவணங்களை சீராக்குவதற்கும் கணிப்பிடல் சரியாக மேற்கொள்வதை உறுதிப்படுத்தும் உள்ளக வேலை திட்டமொன்று நிறுவப்பட நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஆ) மூலதன செலவினம்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டில் தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் வருடாந்த நிதி செயலாற்றல் கூற்றின் பிரகாரம் மொத்தம் ரூபா 50,718,236 ஆக இருந்த மூலதனச் செலவினம் செலவிடப்பட்டிருந்த போதும் , ACA - 6 படிவத்தில் பெறுமதி மூலதனம் ஆக்குதல் ரூபா 9,663,966 அதாவது 19 சதவீதம் மாத்திரமாக இருந்தது அதன் பிரகாரம் மூலதனச் செலவினத்தில் 81 சதவீதத்தில் காணப்பட்ட மூலதன தன்மையிலான செலவினம் இனங்காணப்பட்டு ACA - 6 படிவத்தில் மூலதனம் ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை	ரூபா 41,054,270 ஆன செலவினம் இதுவரை மூலதனமாக்கப்படாத இருந்ததாகவும் இறுதி கொடுப்பனவும் செய்யப்பட்ட பின்னர் மூலதனம் ஆக்கி கணக்கீடு செய்வதாக .	முறையான நடைமுறை ஒன்றின் கீழ் மூலதனச் செலவினமங்களை உரிய சொத்துக்கள் வகைகளின் கீழ் மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(இ) ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i) அம்பாந்தோட்டை மிரிஜ்ஜவல தாவரவியல் பூங்காவின் பிரதான நுழைவு அருகில் 2013 ஆம் ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்ட 12 விற்பனை நிலையங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு நிதி அல்லாத சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டு இருக்கவில்லை.	12 வியாபார நிலையங்களை மதிப்பீடு செய்வதற்காக விலை மதிப்பீட்டு திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக	விரைவான வேலை திட்டம் ஒன்றை செயற்படுத்தி அனைத்து சொத்துக்களையும் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்
(ii) ACA - 2 (ii) படிவத்தின் செலவின கூற்றில் நிதிப் பிரமாணம் 208 இன் கீழ் ஏனைய அமைச்சுகள் திணைக்களங்களால் செலவிடப்பட்ட செலவினத்தின் கீழ் செலவினத்தடைப்பு 322 இன் 2105 செலவின விடயத்தின் மூலம் மீளாய்வாண்டில் செலவிடப்பட்ட ரூபா 16,864,235 ஆன செலவினத்தில் உள்ளடக்கப்பட்ட மூலதனம் ஆக்கப்பட வேண்டிய காணி மற்றும் கட்டிட மேம்படுத்தல் ACA - 6 படிவத்தில் மூலதனம் ஆக்குவதற்கு	ரூபா 16,846,235 ஆன செலவினத்தில் உள்ளடக்கப்பட்ட மூலதன மாக்கப்பட வேண்டிய காணியை மூலனமாக்கு வதற்கும் வேலை பூர்த்தி செய்யப்படாத காணி மற்றும் காணி மேம்படுத்தல்களை மூலதனம் ஆக்குவதற்கும் வேலைகள் பூர்த்தி செய்யப்படாத காணி மற்றும் காணிகளை மேம்படுத்துதல் இனங்கண்டு முடிவுறாத வேலைகளின் கீழ் கணக்கீடு	முறையான வேலை திட்டமொன்றை ஈடுபடுத்தி சரி செய்வதற்கும் எதிர்காலத்தில் சரியாக மற்றும் காலரீதியாக கணக்குகளை உறுதிப்படுத்தி உள்ளக வேலை திட்டம் ஒன்றைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் அச்செயற் திட்டங்களில் வேலை பூர்த்தி செய்யப்படாத காணி மற்றும் கட்டிடங்கள் மேம்படுத்தல் இனங்காணப்பட்டு முடிவுறாத வேலைகளின் கீழ் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை.	செய்வதற்கும் உரிய விடயத்திற்கு ஆலோசனை வழங்கியுள்ளதாக.	

(ஈ) கட்டுநிதி மீதி

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்வு செய்யப்படாத கட்டுநிதி மீதியான ரூபா 974,526 நிதிநிலைமை தொடர்பான கூற்றில் நடைமுறை சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் அம்மீதி நடைமுறை சொத்துக்களின் கீழ் காண்பிக்காமல் அப்பெறுமதியால் நடைமுறை சொத்துக்களில் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தன.	அடுத்த ஆண்டின் போது நிதிக் கூற்றுகளைத் தயாரிக்கும் போது இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாத வகையில் பார்த்துக் கொள்வதற்கு உரிய விடயத்திற்கு ஆலோசனை வழங்கி உள்ளதாக.	சரியாக நிதிக் கூற்றுகளை தயாரிப்பதாக உறுதிப்படுத்தும் உள்ளக வேலை திட்டம் ஒன்றைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(உ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பராமரிக்காமை

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i) காத்திருக்கும் பட்டியல்		
தாபன விதிக் கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 4.3.4 இன் பிரகாரம் அரசின் தரப்படுத்தல் தொடர்பான காத்திருப்பு பதிவேடு ஒன்று பேணி செல்லப்பட்டு இருக்கவில்லை.	பதிவேடு ஒன்று பேணிச் செல்வதற்கு உரிய பிரிவுகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக .	தாபன விதிக் கோவையின் பிரகாரம் காத்திருப்பு பதிவேடு ஒன்றை பேணி செல்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்
(ii) நட்டங்கள் தொடர்பான பதிவேடு		
நிதிப் பிரமாணம் 110 இன் பிரகாரம் நட்டங்கள் தொடர்பான பதிவேடு நாளதுவரையாக்கப் பட்டிருக்கவில்லை.	குறித்த பதிவேட்டை நாளதுவரையாக பேணிச் செல்வதற்காக அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாக.	பதிவேட்டை நாளதுவரையாக்காத உத்தியோகத்தர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கும் பிரமாணங்களின்

			பிரகாரம் பதிவேட்டை நாளதுவரையாக்குவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்

(ஊ) கணக்காய்வுக்கு சான்றுகள் இல்லாமை

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுகளில் ACA 6 படிவத்தில் மொத்தம் ரூபா 8,061,011,502 ஆன ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் இப் பெறுமதியின் சரியான தன்மையை உறுதிப்படுத்த முடியாமல் இருந்தது.	மொத்தம் ரூபா 8,061,011,502 ஆன ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்களின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்குரிய மெய்மையாய்வு அறிக்கை மின்னஞ்சல் மூலம் கணக்காய்வு பிரிவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக. .	பொருள் மெய்மையாய்வ அறிக்கையை கணக்காய்விற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்
(ii)	நிதி அல்லாத சொத்துக்கள் கூற்றில் ACA 6 படிவத்தின் கைதவிர்ப்பாக ரூபா 29,944,850 காண்பிக்கப் பட்டிருந்ததுடன் அம்மீதியில் ரூபா 45,600 கிரயமான 9 உருப்படிகளின் கிரயம் கைதவிர்ப்பு அறிக்கையில் குறிப்பிடப்படாதிருந்தலுடன் எஞ்சிய பெறுமதியை உறுதிப்படுத்து வதற்காக மெய்மையாய்வு அறிக்கை அல்லது ஏனைய ஆவணங்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததால் நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்பட்ட கைதவிர்ப்பு பெறுமதியை கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியாமல் இருந்தது.	ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்களின் சரியான தன்மையை உறுதிப்படுத்து வதற்கு மின்னஞ்சல் மூலம் கணக்காய்வு பிரிவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள தாக.	- மேற்படி -

2. ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம், பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்குரியதாக நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வாண்டின் (இ) (i) பந்தியின் பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

3. நிதி மீளாய்வு

3.1 வருமான முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டின் திணைக்களத்தில் ரூபா 800,000,000 ஆன ஆரம்ப மதிப்பீடு ரூபா 1,150,000,000 என திருத்தம் செய்யப்பட்ட காரணத்தினால் ஆரம்ப மதிப்பீடு மற்றும் திருத்திய மதிப்பீட்டிற்கு இடையே 44 சதவீத வேறுபாடு ஒன்று காணப்பட்டதால் ஆரம்ப வருமான மதிப்பீடு முறைப்படி தயாரிக்கப்படாமல் இருந்ததாக அவதானிக்கப்பட்டது.	உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலா பிரயாணங்களின் வருகை அதிகரித்த போக்கினை கருத்தில் கொள்ளப்பட்டமை மற்றும் உலக நாடுகளுக்கு இடையே பார்வை யிடுவதற்காக சிறந்த பிரயாணத்துடன் கூடிய நாடு இலங்கை குறிப்பிடப்பட்டதால் எதிர்பார்க்கப்பட்ட எண்ணிக்கையை விட அதிக அளவிலான வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் அளவொன்று வருகை தந்தமை மற்றும் உள்நாட்டு சுற்றுலா துறையும் தெளிவான ஒரு வகையில் அதிகரித்தமை.	மதிப்பீட்டை இயலுமான வரை நடைமுறை சாத்தியமாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரை அறவிடப்பட வேண்டிய ரூபா 3,691,000 ஆன நிலுவை வருமானம் மீளாவாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	நிலுவை வருமானத்தை அளவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் வழக்கு இணக்க பாட்டுக்கு வராததால் அதற்குரிய நிலுவைத் தொகை தொடர்பாக இதுவரை	நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கும் காலரீதியில் நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுப்பதற்கும்

	நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதாக	காணப்படும் நிலுவை வருமானத்தை விரைவில் அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்

3.2 செலவின முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டின் ரூபா 752,050,000 ஆன தேறிய மீண்டுவரும் ஏற்பாடுகளுக்கு இடையே ரூபா 60,377,823 ஆன அதாவது தேறிய நிதி ஏற்பாட்டில் 08 சதவீதமான அளவொன்று சேமிக்கப்பட்டு இருந்த போதும் அதில் 17 விடயங்களில் 5 சதவீதத்திலிருந்து 100 சதவீதம் வரையான சேமிப்பு ஒன்று காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.	ஜனாதிபதி செயலாளரடன் மேற்கொள்ளப்பட்டிருந்த செயலாற்றல் உடன்படிக்கையின் பிரகாரம் 6 சதவீத நிதி ஏற்பாட்டை பிடித்து வைத்திருக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டதால் 8 சதவீதம் சேமிக்கப்பட்டதாகவும் எஞ்சிய செலவின விடயங்களுக்குரிய காரணங்கள் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும்	எதிர்காலத்தில் சரியான மற்றும் நடைமுறை சாத்தியமான மதிப்பீடு ஒன்றை தயாரிப்பதற்கும் இது ஏற்பாட்டை செயற்திறனாகவும் ஆக்கப்பூர்வமாகவும் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.3 பொறுப்புக்கள் கடப்பாடுகளுக்கு உட்படல்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2024 ஆம் ஆண்டு நிதிப் பிரமாணம் 94 மற்றும் 2017 ஏப்ரல் 27 ஆம் திகதிய 255/2017ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்திக்கு இணங்காத வகையில் 03 செலவின விடயங்களுக்காக மேற்கொள்ளப் பட்டிருந்த நிதி ஏற்பாட்டை மிகைத்து ரூபா 294,569 ஆன கடப்பாடுகள் ஏற்படுத்தப் பட்டிருந்தன.	எதிர்காலத்தில் நிதி ஏற்பாடுகளை மிகைத்து பொறுப்புக்கள் அல்லது கடப்பாடுகள் ஏற்படுத்திக் கொள்ளப்படுவதில்லை என்பதாக.	நிதி ஏற்பாட்டு எல்லையை மிகைத்து பொறுப்புக்களை ஏற்படுத்துவதை தவிர்ப்பதற்காக செலவின மேற்பார்வை செயற்பாட்டை பலப்படுத்தும் வேலை திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டும்

3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மை

	கணக்காய்வு அவதானிப்பு			கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
	சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் உடனான தொடர்பு	பெறுமதி ரூபா	இணக்கமின்மை		
(அ)	1947 இன் 08 ஆம் இலக்க அரசின் காணி கட்டளை சட்டத்தின் 224 ஆம் பிரிவு		05 பூங்காக்களுக்குரிய 355.8744 சதுர ஹெக்டேயர் அளவிலான காணி மற்றும் மஹவலி அதிகார சபைக்கு சொந்தமாக காணப்படும் பயிற்சி நிலையம் மற்றும் உலர் வலய தாவரவியல் பூங்காவிற்குரிய 124.8423 சதுர ஹெக்டேர் அளவிலான 02 காணிகளும் உட்பட 480.7167 ஹெகடேயர் ஆன காணியை திணைக்களத்திற்கு கையேற்கும் நடவடிக்கைகள் மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் பூர்த்தி செய்யப்பட்டு இருக்கவில்லை	விவசாயத் திணைக்களத்தினால் இக்காணி முறைப்படி தேசிய தாவரவியல் பூங்கா திணைக்களத்துக்கு கையாளிக்காமை மற்றும் மீகலேவ பசுமை இல்லம் மற்றும் உலர் வலய தாவரவியல் பூங்காவின் காணிக்காக மகாவலி அதிகார சபையால் தேசிய தாவரவியல் பூங்கா திணைக் களத்துக்கு நிபந்தனை உடன் கையளிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக.	காணி கட்டளை சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து விரைவில் திணைக்களத்திற்கு காணியை கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்
(ஆ)	2021 திசெம்பர் 9 ஆம் திகதிய 05/2021 ஆம் இலக்க நிதி நிதி அமைச்சின் சொத்துக்கள் முகாமைத்துவ சொற்றறிக்கை		05 ஆண்டுகளுக்கு ஒரு முறை நிதி அல்லாத சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்துக்கு சொந்தமான காணி மற்றும் கட்டிடங்களின் ரூபா 7,631,911,841 கிரயமான பெறுமதி இறுதியாக 2016 ஆம் ஆண்டின் போது மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது	மீண்டும் மதிப்பீடு ஒன்றை செய்யுமாறு உரிய பிரிவினருக்கு அறிவுறுக்கப்பட்டுள்ளதாகவும் புதிய மதிப்பீடு கிடைத்த பின்னர் அப்பெறுமதி சிகாஸ் நிகழ்ச்சி திட்டத்தில் உள்ளடக்கி எதிர்வரும் ஆண்டில் நிதிக் கூற்றுகளில் உள்ளடக்குவதாக	சுற்றறிக்கை பிரகாரம் நிதி அல்லாத சொத்துக்களை மதிப்பீடு செய்து உரிய பிரகாரம் அறிக்கை இடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்

(இ)	இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் தாபனக் கோவையில் XXIV ஆம் அத்தியாயத்தின் 4 மற்றும் 6.3 ஆம் ஆம் பிரிவுகள்	3,778,973	மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு மரணித்த, ஓய்வுபெற்ற, வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட மற்றும் வேலையை விட்டுச்சென்ற 35 உத்தியோகத்தரல்களின் கடன் மீதி அறவிடப்பட்டிருக்கவில்லை.	ஓய்வுபெற்ற 07 உத்தியோகத்தர்களின் மீதிகள் அறவிடப்பட்டுள்ளதாகவும் வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 83,300 தொகை அறவிடப்பட வேண்டியுள்ளதாகவும் சேவையை விட்டுச் சென்ற மற்றும் மரணித்த உத்தியோகத்தர்களின் மீதிகளை பிணையாளர்களிடமிருந்து அறவிடுவதாகவும்	முறையான பரிசோதனையொன்ற மேற்கொண்டு உரிய காலத்தில அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கதாக உத்தியோகத்தர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கும் நிலுவை மீதிகளை விரைவில் அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் 571(3) ஆம் பிரமாணம்	6,742,723	காலாவதியான 19 வைப்புக்கள் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.	வைப்புக்களை விடுவிப்பதற்கும் அரசின் வருமானத்திற்கு செலவு வைப்பதற்கும் நடவடிக்கை எடுப்பதாகவும் இறுதி பட்டியல்களைத் தீர்வு செய்யாத திட்டங்களின் பிடிகாசினை தற்போது பிடித்து வைத்துள்ளதாக	நிதிப் பிரமாணங்களின் பிலரகாரம் நடவடிக்கை எடுத்து பிணை வைப்புக்களை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.5 வங்கிக் கணக்கினை செயற்படுத்துதல்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	திணைக்களத்தின் வங்கிக் கணக்கொன்றில் 2024 நவம்பர் 08 ஆந் திகதி முதல் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 1,265,208 தொகை இனங்காணப்படாத கொடுப்பனவொன்று காணப்பட்டது.	செலவினமொன்றாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டு சரி செய்யப்பட்டுள்ளதாக.	குறித்த கொடுப்பனவை இனங்கண்டு கணக்கீடு செய்வதற்குரிய மூலாதார பதிவேடுகளுடன் கணக்காய்வுப பரிசோதனைக்காக விரைவில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1. பெறுகை

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2023 செப்டம்பர் 14ஆந் திகதி , மிரிஜ்ஜவில தாவரவியல் பூங்காவில் 1100 அடி நீளமும் 8 அடி உயரமும் கொண்ட சல்லடை வேலியை நிறுவுவதற்கான ஒப்பந்தம் ஒரு தனியார் நிறுவனத்திற்கு ரூபா. 3,841,200 (VAT இன்றி) தொகைக்கு வழங்கப்பட்டு குறித்த கட்டுமானம் 2023 நவம்பர் 07, ஆந் திகதி நிறைவு செய்யப்பட்டுள்ள நிலையில் ரூபா. 4,417,380 (VAT உட்பட) தொகை அதற்காக செலுத்தப்பட்டது. இந்த ஒப்பந்தத்திற்கான மதிப்பீட்டைத் தயாரிப்பதில், 04 பொருட்களுக்கு சந்தை விலைகளை விட அதிகமாக ரூபா. 1,858,689 அசாதாரண பெறுமதி சேர்க்கப்பட்டுள்ளது.	மிகைப்படுத்தப்பட்ட மதிப்பீடு விளக்கம். மாகாண சபைப் பிரிவில் வெல்டர்களுக்கு 1.25 நாட்களுக்கு மேலதிகமாக, தேர்ச்சி பெற்ற தொழிலாளர் களுக்கு 3 நாட்கள் சேர்க்கப்பட வேண்டும். மாகாண சபை பகுப்பாய்வில், 1.25 Kg இற்கு பதிலாக 1.5 Kg வெல்டிங் கம்பி பயன்படுத்தப்பட்டது. ஆனால் நாங்கள் 1 கிலோ மட்டுமே பயன்படுத்தியுள்ளோம். (ஆ) இல் குறிப்பிடப்பட்டுள்ள பதிலைத் தவிர, விகிதங்களின் எண்ணிக்கை அதிகரிப்பதைத் தவிர்க்க, SSR தயாரிக்கும் போது பின்வரும் பிரிவுகளில் பணம் எதுவும் சேர்க்கப்படவில்லை.	மதிப்பீடுகள் அசாதாரண விலைகளைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதைக் கண்டறிய முறையான சுயாதீன விசாரணை நடத்தப்பட்டு அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

4.2 திணைக்களத்திற்கு சொந்தமான குத்தகைக்கு விடுதல்.

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	அரச தாவரவியல் பூங்காவின் வெளியேறும் முனையத்தில் அமைந்துள்ள கட்டிடத்தை லக்சல நிறுவனத்திற்கு குத்தகைக்கு விடுதல்.		
(i)	2023 ஒக்டோபர் 25 ஆந் திகதி இரு தரப்பினருக்கும் இடையே நடைபெற்ற சந்திப்பின் அறிக்கையின் அடிப்படையில் மாத்திரம் கருத்திற் கொண்டு 2023 திசெம்பர் 22 முதல் 2033 திசெம்பர் 21, வரை 10 ஆண்டுகளுக்கு விவைமனு அறிவித்தல்கள் எதுவும் இன்றி கட்டிடத்தை குத்தகைக்கு விடுவதற்கு ஒப்புக்கொண்டு இரண்டு வருட காலத்திற்கு ஒரு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.	இது இரண்டு அரசு நிறுவனங்களுக்கு இடையே கைச்சாத்திடப்பட்ட முறையான ஒப்பந்தம் என்பதால், கொள்வனவுக் குழுவின் முடிவு பெறப்படவில்லை. மேலும், லக்சல நிறுவனத்துடன் கையொப்பமிடப்பட்ட ஒப்பந்தத்தின் 11வது பிரிவின்படி, குத்தகைக்	முறையான விசாரணை நடாத்தப்பட்டு, அரசுக்கு இழப்பு ஏற்பட்டிருந்தால், அதை மீட்டு, முறைகேடாகச் செயல்பட்ட உத்தியோகத்தர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

		காலத்தை நீடிக்க தேசிய தாவரவியல் பூங்காத் துறையின் பணிப்பாளர் நாயகத்துக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதால், அதற்காக கொள்வகனவுக் குழுவின் முடிவைப் பெற வேண்டிய அவசியமில்லை.	
(ii)	அரசாங்க மதிப்பீட்டிற்கு முன்பு, மாத வாடகை ரூபா. 412,500 ஆக ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்ததுடன், புதிய மதிப்பீட்டின்படி மாதாந்த வாடகை திருத்தப்படும் என்ற நிபந்தனை குத்தகை ஒப்பந்தத்தில் சேர்க்கப்படவில்லை. இதனால் 2024 திசெம்பர் இல் மதிப்பீட்டுத் திணைக்களம் வழங்கிய மதிப்பீட்டின் அடிப்படையில் வசூலிக்கப்பட வேண்டிய மாத வாடகை ரூபா. 850,000 ஐ அறவிடும்ம் வாய்ப்பை இழந்ததால், 2024 ஆம் ஆண்டில் ரூபா. 5,250,000 வாடகை வருமானத்தை இழந்துள்ளது.	மதிப்பீட்டுத் திணைக்களம் கட்டிட மதிப்பீட்டு அறிக்கைகளை வழங்குவதில் காணப்படும் தாமதம் மற்றும் புதிய மதிப்பீட்டைப் பெற்ற பிறகு மாதாந்த வாடகை அதற்கேற்ப திருத்தப்படும் என்ற நிபந்தனையை ஒப்பந்தத்தில் இணைத்தால், தற்போதையள வாடகையை விட குறைவான வாடகை மதிப்பீடு செய்யப்படுமிடத்து அரசுக்கு வருமான இழப்பு ஏற்படும்.	- மேற்படி -
(iii)	நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்யும் போது ஒப்பந்தம் மீறப்பட்டால் திணைக்களத்தை பாதுகாக்க ஒப்பந்தம் கையெழுத்திடுவதற்கு முன்பே பிணைத் தொகையொன்று பெறப்பட்டிருக்க வேண்டும் என்ற போதிலும் ஒப்பந்தம் கையெழுத்தான 8 மாதங்களுக்குப் பின்னரே குறித்த பிணைத் தொகை பெறப்பட்டது.	எதிர்காலத்தில் இது போன்ற குறைபாடுகளை தவிர்ப்பதற்கான ஆலோசணைகள் வழற்கப்பட்டுள்ளன	- மேற்படி -
(iv)	குத்தகை ஒப்பந்தத்தின் பிரிவு 2 இன் படி அபராதம் விதிக்கப்பட வேண்டியிருந்தாலும், அந்த பிரிவுக்கு ஏற்ப தாமத காலத்திற்கு ரூபா. 48,300 அபராதம் விதிக்கப்பட்டிருக்க வில்லை.	தண்டப்பணம் அறவிடுதல் குறித்து லக்சல நிறுவனத்தை அறிவுறுத்தியுள்ளதோடு கணக்காய்விகானால் குறிப்பிடப்பட்டுள்ள தண்டப்பணத்தை செலுத்தவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது	தண்டப்பணத்தை உடனடியாக அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும்

(ஆ)	2024/2025 ஆம் ஆண்டுக்கான சிற்றுண்டிச்சாலை குத்தகைக்கான விலைமனு அழைப்பில், விலைமனுக்களை சமர்ப்பித்த 2 நிறுவனங்களில் ஒன்று மட்டுமே ஆரம்ப விலைமனு ஆய்வின் போது தேவையான நிபந்தனைகளை பூர்த்தி செய்திருந்தது. அந்த நிறுவனம் சமர்ப்பித்த விலைமனுவில் உணவு மற்றும் பானங்களுக்கான விலைகளை ஒப்பிடுவதற்கு வேறு குறிப்பிடத்தக்க வகையிலான விலைமனுக்கள் இல்லாததால், மீண்டும் விலைமனுக்களை கோருவது பொருத்தமானது என்று தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் குழுக்கூட்ட அறிக்கை பரிந்துரைத்திருந்தது. அந்த பரிந்துரைகளைப் புறக்கணித்து, விலைமனுக்களை சமர்ப்பித்த 2 நிறுவனங்களின் விலைமனுக்கள் மதிப்பீடு செய்யப்பட்டு, கூடிய கேள்வி ரூபா 1,225,000 ஆக இருக்கையில் ரூபா. 790,000 மாதாந்த குத்தகைக்கு உணவகத்தை குத்தகைக்கு விட தீர்மானிக்கப்பட்டது. இதன் விளைவாக 2024 மார்ச் 01 முதல் 2025 பெப்ரவரி 28 வரை 12 மாத காலத்திற்கு ரூபா. 435,000 வீதம் ரூபா. 5,220,000 வருமான இழப்பு ஏற்பட்டிருந்தது.	கொள்வனவுப் பணியை ஏற்றுக்கொள்வதற்கு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு பரிந்துரைகளை வழங்காத பட்சத்தில், ஏல ஆவணங்களை மீளாய்வு செய்து, ஏலதாரரைத் தீர்மானிக்க, கொள்வனவு வழிகாட்டுதல்கள் துறைசார் கொள்வனவுக் குழுவிற்கு அதிகாரத்தை அளிக்கின்றன.	முறையான விசாரணை நடாத்தப்பட்டு, அரசுக்கு இழப்பு ஏற்பட்டிருந்தால், அதை மீட்டு, முறைகேடாகச் செயல்பட்ட உத்தியோகத்தர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	நலன்புரி உணவகத்தினை குத்தகைக்கு விடுவதற்காக 2023/2024 ஆம் ஆண்டுக்கான குத்தகைக்குரிய குத்தகைதாரரைத் தேர்ந்தெடுக்கும் போது, 2023 மார்ச் 21 ம் திகதியுடைய தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அறிக்கையின் படி, தொடர்புடைய தேர்ந்தெடுக்கப்பட்ட ஏலதாரர் அவரின் அனுபவம் அல்லது தற்போதைய வியாபாரம் குறித்த தகவல்களைச் சமர்ப்பிக்காத நிலையிலும் மற்றும் 2023/2024 ஆம் ஆண்டில் ஒப்பந்தத்தின் விதிமுறைகளை மீறியிருந்த நிலையிலும் இது தொடர்பில் கவனம் செலுத்தாமல், விலைமனுக் கோரல்களின்றி மேற்படி குத்தகைதாருக்கு 2024/2025 ஆம் ஆண்டுக்கு உணவகத்தை குத்தகைக்கு விட 2024 ஜுன் 13 ஆந் திகதி முடிவு செய்யப்பட்டது. மேலும், அரசாங்க மதிப்பீட்டைப் பெற்ற பின்னர் மாதாந்த வாடகை அதற்கேற்ப திருத்தப்படும் என்ற நிபந்தனை ஒப்பந்தத்தில் சேர்க்கப்படாததால், புதிய மதிப்பீட்டின் அடிப்படையில் மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் 6 மாதங்களுக்கு ரூபா. 18,150 வருமான இழப்பு ஏற்பட்டது.	ஊழியர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, மிக விரைவில் திறந்து நடாத்திச் செல்லல் மிகவும் முக்கியம் எனுமடிப்படையில் இது இவ் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் ஏல ஆவணங்களை இலவசமாக ஆய்வு செய்யும் வாய்ப்பு பத்திரிகை விளம்பரங்கள் மூலம் வழங்கப்பட்டுள்ளது.	முறையான விசாரணை நடாத்தப்பட்டு, அரசுக்கு இழப்பு ஏற்பட்டிருந்தால், அதை அறவீடு செய்து, முறைகேடாகச் செயல்பட்ட உத்தியோகத்தர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஈ)	2024 ஜுன் 01, முதல் 2025 மே 31 வரை ஒரு வருட காலத்திற்கு பால்விற்பனை நிலைய குத்தகையில், ஏல ஆவணங்களில் ஒரு பெரிய விலகலான முன் தகுதிகள் சமர்ப்பிக்கப்படாதபோது, தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைகளைக் கருத்தில் கொள்ளாமல் கொள்வனவுக் கோரிக்கையின் பின்னர், ஏலதாரர் 2024 பெப்ரவரி 13 ஆந் திகதி பறப்பட்ட வர்த்தக உரிமத்தின் அடிப்படையில் ஒரு தனியார் நிறுவனம் சமர்ப்பித்த மாதத்திற்கு ரூ. 786,700 ஏலத்தை ஏற்றுக்கொண்டமை ஊடாக அதற்கும் அதிகமாக விலைகளைச் சமர்ப்பித்த நிறுவனத்திடமிருந்து ரூபா. 1,225,000 மாத வாடகையைப் பெறும் வாய்ப்பை இழந்ததுடன் இதன் விளைவாக நிறுவனத்திற்கு ஆண்டுக்கு ரூபா. 5,259,600 வருமான இழப்பு ஏற்பட்டது. மேலும், புதிய மதிப்பீடு பெறப்பட்ட பிறகு மாதாந்த வாடகை அதற்கேற்ப திருத்தப்படும் என்ற நிபந்தனை ஒப்பந்தத்தில் சேர்க்கப்படாததால் 2024 ஜுன் 01, முதல் 2024 திசெம்பர் 31, வரையிலான 7 மாத காலத்திற்கு ரூபா. 13,300 வீதம் ரூபா. 93,100 வாடகை வருமான இழப்பு ஏற்பட்டது.	ஒரு கொள்வனவுப் பணியை வழங்கு வதற்கான பரிந்துரை களை தொழில் நுட்ப மதிப்பீட்டுக் குழு வழங்காத பட்சத்தில், தொடர்புடைய ஏல ஆவணங்களை மீள் பரிசீலனை செய்து, ஒப்பந்தத்தை வழங்குவதற்கான வெற்றி பெற்ற ஏலதாரரைத் தீர்மானிக்க, கொள்வனவு வழிகாட்டுதல்கள் துறைசார் கொள்வனவுக் குழுக்களுக்கு அதிகாரம் அளிக்கின்றன. புதிய மதிப்பீட்டைப் பெற்ற பிறகு மாதாந்த வாடகை அதற்கேற்ப திருத்தப்படும் என்ற நிபந்தனை ஒப்பந்தத்தில் சேர்க்கப்பட்டால், தற்போதைய வாடகையை விட குறைந்த விகிதத்தில் வாடகை மதிப்பிடப்பட்டால் அரசாங்கம் வருமானத்தை இழக்கும்.	- மேற்படி -

4.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை.
(அ)	2021 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் சுவாஹாஸ் மலர் விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா. 6,886,585 மதிப்புள்ள 17 பொருட்கள் 01 முதல் 03 ஆண்டுகளுக்கு இடையில் சம்பந்தப்பட்ட மலர் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படாமல் சேமித்து வைக்கப்பட்டிருந்தன. மேலும், புற ஊதா கதிர்வீச்சுக்குத் தாக்குப்பிடிக்கும் வகையிலான 13 கற்றை பொலிதீன் மற்றும் நிழல் வலைகள் நீண்ட காலமாக பாதுகாப்பற்ற நிலையில் வைக்கப்பட்டிருந்தன.	2025 பெப்ரவரி மாதம் நியமிக்கப்பட்ட குழு ஒன்றின் மூலம் குறித்த பொருட்களை விநியோகிக்க பொருத்தமான விவசாயிகளை தெரிவு செய்யவும் அவ்வாறு பொருத்தமானவர்கள் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் குறித்த பொருட்களை விநியோகிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்	சொத்துக்களை உரிய நோக்கத்திற்காகப் பயன்படுத்தாதது குறித்து முறையான விசாரணை நடத்தப்பட்டு, சம்பந்தப்பட்ட பொறுப்பான உத்தியோகத்தர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மேலும் இந்த சொத்துக்களை திறம்பட பயன்படுத்த உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	2016 ஆம் ஆண்டில், பயன்பாட்டிலிருந்து	2025 பொருட் கணக்கெடுப்புக்	இந்த இயந்திரங்கள் மற்றும்

	அகற்றப்பட்ட 04 குளிரூட்டிகள் பழுதுபார்க்கப்பட்டு பயன்படுத்தப்படாமலோ அல்லது அப்புறப்படுத்தப்படாமலோ அலுவலகக் சேமிப்பகத்தில் செயலற்ற நிலையில் காணப்பட்டன	குழுவுக்கு சமர்பித்து அடுத்தகட்ட நடவடிக்கைகளுக்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும்	உபகரணங்களை பழுதுபார்த்து, பயன்படுத்த அல்லது முறையாக அப்புறப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
(இ)	மலர் வளர்ப்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவின் அந்தூரியம் பிரிவில் நிழல் வலைகளைப் புதுப்பிப்பதற்காக 2018 ஆம் ஆண்டில் ரூபா. 1,130,220 க்கு கொள்வனவு செய்யப்பட்ட 26 நிழல் வலைகளில், ரூபா. 695,520 மதிப்புள்ள 16 நிழல் வலைகள் அந்தூரியம் பிரிவின் சேமிப்பகத்தில் கிட்டத்தட்ட 07 ஆண்டுகளாக செயலற்ற நிலையில் சேமிக்கப்பட்டுள்ளன. மேலும், பிரிவில் நிழல் வலைகள் காணப்பட்ட நிலையிலும், 2021 ஆம் ஆண்டில், மலர் விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்காக மேற்படி வகை நிழல் வலைகளின் 13 ரோல்கள் ஒவ்வொன்றும் ரூபா. 3,297 க்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.	மேலதிகமான நிழல் விலைகளில் ஒரு தொகுதியை அந்தூரியம் பிரிவின் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தவும் எஞ்சியவற்றை ஏனைய பூங்காக்களின் தேவை தொடர்பில் ஆராய்ந்து அவற்றிற்கு வழங்கவுமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன	சொத்துக்களை உரிய நோக்கத்திற்காகப் பயன்படுத்தாதது குறித்து முறையான விசாரணை நடத்தப்பட்டு, சம்பந்தப்பட்ட பொறுப்பான உத்தியோகத்தர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மேலும் இந்த சொத்துக்களை திறம்பட பயன்படுத்த உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.
(ஈ)	கம்பஹா தாவரவியல் பூங்காவில் 2013, 2015 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்ட 16 விலைமதிக்கு அறியப்படாத உபகரணங்கள் சேமிப்பகத்தில் 02 முதல் 04 மாதங்களுக்கு இடையில் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டன. மேலும் அவற்றை சரிசெய்ய எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.	16 உபகரணங்களில் 7 உபகரணங்களை 2024 பொருட்கணக்கெடுப்பின் போது ஏலத்தில் விடவும் ஏனைய 9 உபகரணங்களை காணப்படும் நிதி ஒதுக்கீடுகளிற்கேற்ப புதுப்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது	- மேற்படி -
(உ)	கம்பஹா தாவரவியல் பூங்காவில் உள்ள தாவர வளர்ப்பகத்தில் நடாத்தப்பட்ட மாதிரி ஆய்வில், 12 தாவர இனங்களுக்கு அவசியமான ரூபா. 42,300 மதிப்புள்ள 423 தாவரங்களின் பற்றாக்குறையும், 3 தாவர இனங்களுக்கு அவசியமான ரூபா. 3,700 மதிப்புள்ள 37 தாவரங்களின் பற்றாக்குறையும் கண்டறியப்பட்டது. மேலும், அந்தூரியம் மற்றும் ஓர்க்கிட் வீட்டில் 594 பதிவு செய்யப்படாத ஓர்க்கிட் தாய் தாவரங்கள் மிகுதியாகவும், 56 ற்கான குறைபாடும் காணப்பட்டதுடன் தாவர பதிவேட்டில் பதிவு செய்யப்படாத 6 இனங்களைச்	2025 முதல் இனங்களை வேறுபடுத்தி இருப்புப் புத்தகமொன்றை பேணுவதற்கு அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன	ஒரு முறையான கணக்கெடுப்பு நடாத்தப் பட்டு, குறைபாடுகள் மற்றும் உபரிகள் குறித்து பொறுப்புக் கூற வேண்டிய தரப்பினருக்கு பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதுடன் ஆவணங்களை இற்றைப்படுத்திய நிலையில் வைத்திருக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

சேர்ந்த 1170 தாவரங்கள் காணப்பட்டன.

(ஊ)	முறையான மதிப்பீடு மற்றும் திட்டம் இன்றி அச்சிடப்பட்ட தாவர பெயர் பலகைகள் 6 ஆண்டுகளாக செயலற்ற நிலையில் காணப்பட்டன.	இந்தப் பெயர்ப்பலகைகள் சில ஆண்டுகளுக்கு முன்பு தயாரிக்கப்பட்டதுடன் கம்பஹ தாவரவியல் பூங்காவின் வனப் பதிவேடு தயாரிக்கப்பட்ட பின்னர் பெயர்ப்பலகைகள் இல்லாத தொடர்புடைய தாவரங்களுக்கு அவை பொறுத்தப்பட்டன. மேலும் எதிர்காலத்தில் அந்தப் பெயர்ப் பலகைகளின் பெயர்களை மாற்றி தோட்டத்தில் உள்ள தாவரங்களுக்கு பொறுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது	தேவையை சரியாக மதிப்பிடாமல் செயற்பட்ட உத்தியோகத்தர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன் விளம்பரப் பலகைகளை திறம்பட பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(எ)	பேராதனையில் உள்ள அரச தாவரவியல் பூங்காவில் தோட்ட நுழைவாயிலுடன் கூடிய தொங்கு பாலத்திற்கு அருகில் கையகப்படுத்தப்பட்ட 0.3658 ஹெக்டயார் காணியில் 68 சதவீதம் அதாவது இந்த நிலத்தின் 0.2513 ஹெக்டயார் நிலம், தற்போது சட்டவிரோத குடியிருப்பாளர்களால் நிரந்தர கட்டிடங்கள் நிர்மாணித்து ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. .	தொடர்புடைய பணிக்கு மாத்திரம் பயன்படுத்துவதற்கு மட்டுமே இணக்கம் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், குறித்த பணி மேற்கொள்ளப்படாமையால், அதை வேறொரு நிறுவனத்திற்கு வழங்க பிரதேச செயலாளர் முடிவு செய்திருந்தார். எனினும் காணியை மீண்டும் திணைக்களத்துக்கு மீண்டும் வழங்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.	காணி தொடர்பான விடயங்களை தீர்த்து வைப்பதன் மூலம் உரிமையைப் மீளப்பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஏ)	ரூபா. 2,242,500 மதிப்புள்ள உபகரணங்கள் அரச தாவரவியல் பூங்காவில் உள்ள ஒரு களஞ்சியத்தில் 6 ஆண்டுகளாக செயலற்றதாகவும், பயன்படுத்தப்படாமலும் காணப்பட்டன	சேதனப் பொருட்களைத் துண்டாக்கும் இயந்திரம் தற்போது சேதனப் பசளை தயாரிக்கும் வளாகத்தில் பொறுத்தப்பட்டு பயன்படுத்தப்படுவதுடன் குப்பை சேகரிக்கும் இயந்திரத்தை வேறொரு அரசு நிறுவனத்திற்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டாலும், எந்த பொறுப்பேற்றலும் கிடைக்கவில்லை என்பதாக	இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை திறம்பட பயன்படுத்துவதற்கான திட்டமொன்றை செயற் படுத்தவும், தேவையற்ற இயந்திரங்களை தேவைகள் உள்ள பிற நிறுவனங் களுக்கு வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(ஐ)	04 தாவரவியல் பூங்காக்களுக்குச் சொந்தமான ரூபா. 15,080,380 மதிப்புள்ள 08 கோல்ப் கார்களும், மதிப்பு அறியப்படாத 10 கோல்ப் கார்கள் உட்பட 02 கோல்ப் கார்களும் 01 மாதம் முதல் 03 ஆண்டுகள் வரை பயன்படுத்தப்படாமல் இருந்ததால், கோல்ப் கார்களிலிருந்து ஈட்டக்கூடிய வருமானம் இழப்பு ஏற்பட்டிருந்தது.	சீரமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் சீதாவாக்க தாவரவியல் பூங்காவிற்குச் சொந்தமான 02 மின்கலக் கார்களை கழித்தெதுக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதாக.	கோல்ப் கார்களை விரைவாக சீர்செய்து சேவையில் ஈடுபடுத்தி வருமான மூலங்களை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்
(ஒ)	சீதாவாக்க ஈரவலய தாவரவியல் பூங்காவிற்குச் சொந்தமான 0.5015 ஹெக்டயார் நிலமும், ஹக்கல தாவரவியல் பூங்காவிற்குச் சொந்தமான 49.564 ஹெக்டயார் நிலமும் சட்டவிரோத ஆக்கிரமிப்பாளர்களால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த போதிலும், இந்தக் காணிகளை மீட்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.	காணிகளை சீர்செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் காணிகளை பாதுகாப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதாக	காணி தொடரபான விடயங்களை சீர்செய்வதன் மூலம் காணி உரிமையைப் உறுதிப்படுத்தவும், பாதுகாக்கவும் ஒரு முறையான செயல்திட்டம் தயாரிக்கப்பட வேண்டும்.
(ஓ)	கம்பஹா தாவரவியல் பூங்காவிற்குச் சொந்தமான ஒரு வாடகை வண்டியையும், ஹக்கல தாவரவியல் பூங்காவிற்குச் சொந்தமான ஒரு காரை முறையே 1 வருடம் 4 மாதங்கள் மற்றும் 1 வருடம் ஆகிய காலங்கள் பழுதுபார்க்காமல் கடந்த போதிலும், பழுதுபார்ப்புகளை மேற்கொண்டு அந்த வாகனங்களை சேவையில் ஈடுபடுத்த எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.	பழுதுபார்ப்புகளை மேற்கொள்ள அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உரிய துறைகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக.	அவற்றை உடனடியாக பழுதுபார்த்து பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஔ)	அனுக உயிரியல் ஆய்வகத்தில் பிரித்தெடுக்கப்பட்ட டிஎன்ஏ மாதிரிகளை பரிசோதிப்பதற்கான 2 வருட உத்தரவாதத்துடன் கடந்த ஆண்டு ரூபா. 640,000 க்கு கொள்வனவு செய்யப்பட்ட Page Unit உபகரணங்கள் ஒரு வருட உத்தரவாத காலத்தை நிறைவு செய்துள்ள போதிரும் இதுவரை ஒரே ஒரு பரிசோதனை மட்டுமே நடாத்தப்பட்டுள்ளது.	இந்த உபகரணம் குறிப்பிட்ட விசேட மரபணு சோதனைகளுக்கு மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. மேலும் போதுமான உத்தியோகத்தர்கள் பணியில் இருக்குமிடத்து இந்த உபகரணத்தை உற்பத்தி ஆராய்ச்சிக்கு பயன்படுத்தலாம்.	போதுமான பயிற்சி பெற்ற உத்தியோகத்தர்களை பணியமர்த்துவதன் மூலம் எதிர்பார்த்த நோக்கங்களுக்காக இயந்திரத்தைப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(க்)	உலர்ந்த மாதிரிகளை பார்கோட் லேபள்களைப் பயன்படுத்தி டிஜிட்டல் முறையில் புகைப்படம் எடுக்கும் நோக்கத்திற்காக 02 புகைப்படக் கருவிகள் மற்றும் 02 Digitizing Copy Stand இருந்தபோதிலும், 2021 முதல் 2024 வரை அவற்றின் பயன்பாட்டை	போதுமான ஊழியர்கள் இல்லாமை, உபகரணங்களில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறை சரிசெய்ய சுமார் 05 மாதங்கள் ஆனமை மற்றும் பயன்படுத்தப்பட்ட வண்ண அட்டைகளை	முறையான திட்டமிடலைப் பயன்படுத்தி சொத்தை அதனூடாக எதிர்பார்க்கப்படும் ே நோக்கத்திற்காக திறம்பட பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

ஆய்வு செய்தபோது, டிஜிட்டல் புகைப்படக் கலையின் முன்னேற்றம் 2021 உடன் ஒப்பிடும்போது 78 சதவீதம் குறைந்துள்ளது.	கொள்வனவு செய்ய இயலாமை போன்ற காரணங்களால் முன்னேற்றம் மந்தமாகியுள்ளது.

4.4 நட்டங்களும் சேதங்களும்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	நிதிப் பிரமாணம் 104 இன் பிரகாரம் அரசுக்கு சேதம் ஒன்று அல்லது நட்டம் ஒன்று இடம்பெற்ற உடன் அதன் அளவு காரணங்கள் பொறுப்பான தரப்பினர் இனங் காணப்பட்டு அரசுக்கு ஏற்படும் நட்டங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் நிதிக் கூற்றுகளில் இணைப்பின் (i) இல் நட்டங்கள் மற்றும் சேதங்கள் விட்டு விடல் கூற்றில் தாவரவியல் பூங்காக்கள் திணைக்களத்தின் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேலும் அறவேண்டிய வேண்டிய அறவிடுவதற்கு அல்லது பதிவழிப்பதற்கு உள்ள சேதங்கள் மற்றும் நட்டங்கள் 26 தொடர்பாக வெளிப்படுத்தப்பட்டு இருக்கவில்லை. அவ்வாறு அந்த நட்டங்கள் மற்றும் சேதங்கள் என்பவற்றின் அறவீட்டு காலப்பகுதி காலப்பகுப்பாய்வும் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டு இருக்கவில்லை.	2024.12.31 ஆம் திகதி மேலும் அறவிடுவதற்கு அல்லது பதிவழிப்பதற்கு உள்ள சேதங்கள் தொடர்பாக தகவல்களை உள்ளடக்குவதற்கு தாமதமானதாகவும் எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாமல் இருப்பதற்கு உரிய விடயங்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாக	சேதங்கள் மற்றும் நட்டங்களை சரியாக அறிக்கையிடாமை மற்றும் முறைப்படி நடவடிக்கை எடுக்காத உத்தியோ கத்தர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கும் சேதங்கள் மற்றும் நட்டங்கள் தொடர்பாக பரிசோதனையை விரைவுபடுத்தி பரிந்துரை அடிப்படையில் உரிய நடவடிக்கைகள் எடுப்பதற்கும் செயற்பட வேண்டும்.
(ஆ)	நிதிப் பிரமாணம் 104(3) இன் கீழ் நட்டம் ஒன்று இடம்பெற்றவுடன் அந்நட்டத்துக்குரிய காரணங்களை உள்ளடக்கி நட்டம் இடம்பெற்ற திகதி முதல் 07 நாட்களுக்குள் முழு அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதற்கு தவறி இருந்தால் நட்டம் இடம்பெற்றவுடனே ஆரம்ப அறிக்கையை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் அம்பாந்தோட்டை உலர்வலய தாவரவியல் பூங்காவில் 2010 திசெம்பர் 21 ஆம் திகதி	பரிசோதனை ஒன்று மேற்கொண்டு உள்ளதாகவும் சம்பவ பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தகவல்களை கண்டுபிடிக்க முடியாததால் பற்றாக்குறை பொருட்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் நி.பி 104(4) பரிசோதனை மேற்கொண்டு அப் பரிந்துரைகளின் பிரகாரம் புத்தகத்திலிருந்து	நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் காலரீதியாக நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்குள் நட்டங்கள் சேதங்கள் தொடர்பாக பரிசோதனையை விரைவில் மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்

	இடம்பெற்ற சொத்துக்கள் காணாமல் போனமை தொடர்பாக 13 ஆண்டுகள் கடந்து இருந்த போதும் ஆரம்ப அறிக்கை வழங்கப்பட்டிருக்கவில்லை	பதிவழிப்பதற்கு 2025 ஜனவரி 24 ஆம் தேதி பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரம் கிடைத்துள்ளதாக	

4.5 முகாமைத்துவ பலவீனங்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	பேராதனையில் உள்ள அரச தாவரவியல் பூங்காவின் தொங்கு பாலத்திற்கு அருகிலுள்ள தோட்ட நுழைவு சாலையிலிருந்து 0.3658 ஹெக்டயார் நிலத்தை வாகன நிறுத்துமிடத்திற்காக யட்டினுவர பிரதேச செயலாளர், திணைக்களத்திடம் 2020 ஒக்டோபர் 08 ஆந் திகதி ஒப்படைத்து 04 ஆண்டுகள் கடந்துவிட்ட போதிலும் இந்த நிலத்தை பெற்றுக்கொண்ட நோக்கத்திற்காகப் பயன்படுத்த எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.	சம்பந்தப்பட்ட நோக்கத்திற்காக மட்டுமே நிலத்தை வழங்குவதற்கு விருப்பம் தெரிவிக்கப் பட்டிருந்தாலும், அந்த காணியில் திட்டமிடப்பட்ட செயற்பாடு தோல்வியடைந்ததால், அதை வேறொரு நிறுவனத்திற்கு வழங்க பிரதேச செயலாளர் முடிவு செய்திருந்தார். எனினும் மீண்டும் திணைக்களத்துக்கு நிலத்தை வழங்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.	சம்பந்தப்பட்ட காணியை பெற்றுக் கொண்ட நோக்கத் திற்காகப் பயன்படுத்து வதற்கான செயற்திட்டம் விரைவாக தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டும்.
(ஆ)	விவசாயத் திணைக்களத்தின் கீழ் பணிப்பாளர் அலுவலகமாக இயங்கிய தாவரவியல் பூங்காத் திணைக்களம் 2006 நவம்பர் 10 ஆம் திகதியுடைய அரச வர்த்தமானி இலக்கம் 1471-2006 மூலம் புதிய திணைக்களமாக அறிவிக்கப்பட்டு 18 ஆண்டுகள் கடந்துவிட்ட போதிலும், தாவரவியல் பூங்காத் திணைக்களத்தின் வளாகத்திற்குள் நிறுவப்பட்ட விவசாயப் பணிப்பாளர் உத்தியோகபூர்வ இல்லம், மற்றும் விவசாய வெளியீட்டு அலகு ஆகியவற்றை தாவரவியல் பூங்காத் திணைக்களத்துக்கு பெற்றுக் கொள்ளும் பணி இன்னும் நிறைவு செய்யப்படவில்லை.	தாவரவியல் பூங்காத் திணைக்களத்திற்கு 02 கட்டிடங்களையும் கையகப்படுத்த கோரிக்கைகள் விடுக்கப்பட்ட போதிலும், அந்தக் கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டிருந்ததுடன், அது தொடர்பில் மேலதிகமான கோரிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், கலந்துரையாடலுக்கான வாய்ப்பு வழங்கப்படவில்லை.	சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் கலந்துரையாடி சொத்துரிமைகளை முறையாகத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(இ)	மலர் வளர்ப்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவில் காலா வதியான மற்றும் பயன்படுத்த முடியாத 37 அடையாளம் காண முடியாத இரசாயனங்களும் (லேபள்கள் இல்லாமல்) 69 காலாவதியான இரசாயனங்களும் காணப்பட்டதுடன் அந்த இரசாயனங்களை முறையான நடைமுறைகளின்படி அப்புறப்படுத்துவதற்குத் திணைக்களம் சரியான நடவடிக்கைகளை எடுக்கவில்லை.	மத்திய சுற்றுச்சூழல் அதிகாரசபையால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனம் மூலம் இரசாயனங்களை அப்புறப்படுத்த தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.	ஒழுங்கான முறையில் அப்புறப்படுத்துவதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டு செயல்படுத்தப்பட வேண்டும்.
(ஈ)	தாபனக் விதிக் கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் பிரிவு 5 இன் படி வீட்டு வாடகைகள் அறவிடப்பட வேண்டும் என்பதுடன் பிரிவு 5.6 இன் படி பொருளாதார வாடகையை தீர்மானிக்க பிரதான மதிப்பீட்டாளரின் அறிக்கையைப் பெற வேண்டும். அதன்படி, அரச தாவரவியல் பூங்காவிற்குச் சொந்தமான 18 உத்தியோகபூர்வ குடியிருப்புகளுக்கு மாதாந்த பொருளாதார வாடகை ரூபா. 1,000 வசூலிக்கப்படுவதுடன் இந்த பொருளாதார வாடகை 2016 திசெம்பர் 02 திகதியிடப்பட்ட தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் வசூலிக்கப்பட்டது. மேலும் அந்த மதிப்பீடு அடுத்த 02 ஆண்டுகளுக்கு மட்டுமே செல்லுபடியாகும் என்பதன் அடிப்படையில் , புதிய மதிப்பீட்டைப் பெறுவதற்கான காலம் 05 ஆண்டுகளைத் தாண்டியிருந்த போதிலும் 2025 பெப்ரவரி 25 ஆம் தேதி வரை, பொருளாதார வாடகை மதிப்பிடப்படவில்லை என்பதுடன் புதிய அறிக்கை பெறப்படவில்லை. புதிய மதிப்பீட்டைப் பெறத் தவறியதால், புதிய மதிப்பீட்டின் காரணமாக வர வேண்டிய வீட்டு வாடகை வருமானத்தை அரசாங்கம் இழந்திருந்தது.	மதிப்பீட்டு காலம் நிறைவுற்ற அனைத்து உத்தியோகபூர்வ குடியிருப்புகளுக்கும் புதிய மதிப்பீட்டு அறிக்கைகளைப் பெறவும், அவை பெறப்படாவிட்டால் நினைவூட்டல்களை அனுப்பவும், மதிப்பீட்டு அறிக்கைகள் கிடைக்கும் வரை நிறுவனக் குறியீட்டின்படி வீடுகளின் வாடகையை அறவிடுவதற்குமான மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன	மதிப்பீட்டு அறிக்கைகளை சரியான நேரத்தில் பெறாமல் பொருளாதார வாடகையை வசூலித்ததற்காக பொறுப்பான உத்தியோகத்தர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மேலும் மதிப்பீட்டு அறிக்கைகளை கோருவதன் மூலம் பொருளாதார வாடகையை புதுப்பித்த அடிப்படையில் வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

5. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்

கணக்காய்வு அவதானிப்பு		கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2024 ஆம் ஆண்டின் வரைவு செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் நிறுவப்பட்ட 04 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுக்கு (SDGs) நிர்ணயிக்கப்பட்ட ஒவ்வொரு குறிகாட்டிகளையும் அடைவதில் உள்ள முன்னேற்றத்தை ஆராயும் போது, 03 குறிகாட்டிகளின் முன்னேற்றம் 63 சதவீதத்திற்கும் 80 சதவீதத்திற்கும் வரை இடைப்பட்டு இருந்தது.	உத்திளேயாகத்தர்கள் பற்றாக்குறை, பயிற்சி வகுப்புகளுக்கான கேள்வி குறைவு, உற்பத்தி செலவு அதிகரிப்பு மற்றும் தகைமையுடைய ஊழியர்கள் பற்றாக்குறை போன்ற காரணங்களால் இலக்குகளை அடைய முடியவில்லை என்பதாக.	நிலைபேறான இலக்குகளை அடைய செயற்திறனான முயற்சிகள் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

6. மனித வள முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு		கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 964 ஆக இருந்ததுடன் உள்ளவாறான பதவியணியினர் 736 ஆகும். அதில் சிரேஷ்ட மட்டத்தில் 08 உத்தியோகத்தர்கள் உட்பட 168 வெற்றிடங்களும் 10 மிகை உத்தியோகத்தர்களும் இருந்தனர்.	வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக	பதவியணியை மீளாய்வு செய்து உள்ளவாறான பதவியணியினரை திருத்தம் செய்வதற்கும் தேவையான வெற்றிடங்களை நிரப்புவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.